Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.202/2022, Cr.No.747/2020, Kandili PS**

DEPOSITION OF **DEFENCE SIDE EVIDENCE** No.1, Page.No.

| | |
|---|---|
| பெயர் | பழனி |
| வயது | 59 |
| தந்தை/கணவர் பெயர் | ஆறுமுகம் |
| கிராமம் | சு.பள்ளிப்பட்டு, அண்ணாநகர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | -- |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 22nd day of January 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் அண்ணாநகரில் சித்ரா வீட்டின் எதிரில் உள்ள சாலையில் 400 அடி தொலைவில் அமைந்துள்ள டேங்க்கின் ஆபரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிக்கும், புகார்தாரருக்கும் உள்ள விரோதம் எனக்கு தெரியும். சித்ராவின் வீட்டிற்கு எதிரே போர் போடுவதால் ஏற்பட்ட பிரச்சனையினால் எதிரி ஊருக்கு சாதகமாக பேசியதால் புகார்தாரருக்கும் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டது. சித்ரா என்பவர் தண்ணீர் பைப்பை உடைத்துவிட்டதால் ஊரார்கள் மறியலில் ஈடுபட்டார்கள். இவர்கள் இருவர்களுக்குமிடைய சோப்பு விற்பதில் பிரச்சனை ஏற்பட்டது. சித்ரா என்பவர் கார்த்தி மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் அவரது மகளின் மூலம் மற்றொரு புகாரை அளித்தார். வழக்கின் மூலம் பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டார்கள்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் 25 வருடங்களாக டேங்க் ஆபரேட்டராக உள்ளேன். முதல் விசாரணையில் கூறிய சம்பவம் எப்போது நடந்து என்றால் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு கொரோனோ தொற்று ஏற்பட்ட காலத்தில் நடந்தது.

தேதி சரியாக ஞாபகமில்லை. போர் போட்டது Highways–க்கு சொந்தமான இடம். போர் போடப்பட்ட நேரத்தில் சின்னராசு ஊராட்சி மன்றத் தலைவராகவும், ஜனாரத்தினம் வார்டு உறுப்பினராகவும், பெருமாள் கவுன்சிலராகவும், ஊர்க்கவுண்டராக விநாயகமும் இருந்தனர். மேற்படி சம்பவம் குறித்து சித்ரா மீது பைப் உடைத்தது சம்பந்தமாக புகார் அளித்தனர். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி வேறு ஊரில் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். போர் போடப்பட்டது Highway நிலம் என்பதால் சித்ரா தடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. புகார் சம்பந்தமான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சித்ரா தண்ணீர் விடவதில் ஏற்ப்பட்ட பிரச்சனையினால் இந்த வழக்கில் விநாயகம், ராஜேந்திரன், மணி, பழனி ஆகியோர் பேரில் புகார் அளித்துள்ளார். மேற்படி தண்ணீர் விடுவதில் ஏற்பட்ட பிரச்சனைக்காக மட்டுமே நான் சாட்சியமளித்துள்ளேன். சித்ரா அவரது பெண்ணின் கையை இழுத்ததற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆஜர் எதிரி எனது நண்பர் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றாலும், எதிரி எனது நண்பர் என்பதால் அவரை காப்பாற்ற, அவருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரரின் பெயர் ஜெயசித்ரா ஆனால் எனக்கு அவரின் பெயர் தெரியாததால் சித்ரா என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல, அவரை சித்ரா என்றும் அழைப்பர்.

<u>**மறுவிசாரணை:– இல்லை.**</u>

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.01.22 19:15:12 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.